மாண்புமிகு டாக்டர் எச், வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ) 13-1.-81 தேதியிட்ட சுகாதாரத்துறை அரசு ஆணை (நிலை) எண் 2084—ன் படி மருந்தியல் துறை தனியாகப் பிரிக்கபபட்டு விட்டது. அத்துறையைச் சேர்ந்தவரே அதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. வி. ப. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருந்தியல பட்டதாரிகளும், மருந்து உற்பத்தியாளர் களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க இங்கே ஓராணடு காலத்திற் குள மருத்துவத் துறையில் இருந்து மருந்தியியல் துறையைப் பிரித்து, தனியாக மருந்தியிற் துறை இயக்குனரகம் ஏற்படுத்தி, மருந்தியல் துறையைச் சேர்ந்தவரையே அதற்குத் தலைவராக நியமித்திருப்பதற்காக நான் மாண்புமிகு அமைசசர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், ஆனால், மருந்திலே கலப்படம் செய்வதைப் பரிசோதனை செய்வதற்கான பரிசோதனைக் கூடம் மட்டும் இன்றும் மருத்துவத்துறையில் இருக்கிறது. இது எப்படி இருக்கிறது என்று சொன்னால், இந்திரர்கள் மாறினாலும், இந்திராணி மாற மாட்டார் என்பதுபோல் இருக்கிறது. இப்போது புதிதாக மருந்தியல் துறை ஆரம்பிக்கப்பட்டு இருப்பதால், இந்த மருந்துகள் பரிசோதனைக் கூடத்தையும் அந்தத் துறையிடத்தில் ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. வி, வி. சுவாமிநாதன் அவர்கள் சொல்லக் கூடிய அந்த பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மருத்துவத் துறை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு -தனித்தனியாக டைரக்டர்கள் நியமிக்கப்பட்டு அது இயங்கி வருகிறது. எனவே இப்போது இந்த மூன்றுக்கும் சேர்த்து ஒரு தனி டைரக்டர் ஜெனரல் போடுகின்ற உத்தேசம் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அது உண்மையா? ஆமெனில் அமைச்சரவர்கள் அது பற்றிப் பதிலளிப்பாரா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் தற்போது இல்லை.

கடலூர் மருத்துவமனையில் மருத்துவ சித்தப் பிரிவு அமைக்கும் திட்டம்.

*வினா எண் 745:— திரு.எஸ். சிவராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

1982 ஏப்ரல் 3]

(அ) கடலூர் அரசினர் மருத்துவ மனையில் சித்த மருத்துவப் பகுதி தனியாக திறக்கப்பட்டு நோயாளிகள் தங்கி சிகிச்சைப்பெற வசதி செய்ய அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு இதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) கடலூர் அரசினர் மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவு பத்து படுக்கைகளுடன் இயங்கி வருகிறது. அதற்குத் தனியாகக் கட்டிடம் கட்ட செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண் 746— திரு. கு. ரமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய் பிரிவு ஒன்று ஏற்படுத்த திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது குறித்து விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ) இது தொடர்பான செயற்குறிப்பொன்று துறைத் தலைவரின் ஆய்வில் இருக்கிறது.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சாதாரண மருத்துவமனை மட்டுமல்ல. அது மருத்துவக்கல்லூரி என்ற வகையிலே மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்கக்கூடிய ஒரு இடம். அப்படி அந்த மருத்துவமனை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையாக ஆனதிலிருந்து புற்றுநோய்ப் பிரிவே இல்லாமல் இருப்பது அந்த மாணவர்களுடைய பயிற்சிக்குக் கூட இடையூறாக இருக்கின்றது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இதுவரை அப்படி புற்றுநோய்ப்பிரிவு ஏற்படுத்தப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம்? மற்ற இடங்களுக்குப் ப்ரையாரிட்டி கொடுத்து இந்த இடத்திற்கு அதனால் கொடுக்காமல் இருப்பது தான் காரணமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இது மட்டுமல்லாமல் இன்னும் இரண்டு மூன்று கல்லூரிகளில் அப்படி இல்லாத நிலைமை இருக்கின்றது. மேலும் இது இல்லை என்றால் மாணவர்களின் படிப்பிற்கு எந்த விதமான